பாலைக் கறக்கவில்லை. அதிகமான அளவுக்கு பாலைக் கறக்கின்றன. அதிகமான பால் உற்பத்தி திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து வருகிறது. வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இரண்டு மாவட்டங்களும் பெரிய மாவட்டங்களாக இருப்பதால் திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர், மாடுகள் வாங்குவதற்கு loan வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். எங்களிடம் வரும் மனுக்களுக்கு, துறை மூலமாக loan கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். கால்நடைத் தீவனமும் வழங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். இன்றைக்கு ஆவின் பால் எல்லா இடங்களிலும் மிக அதிகளவில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதிகளவுக்கு பாலும் கொள்முதல் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகளவு பால் கறக்கக்கூடிய கறவை மாடுகள் குறைவாக இருப்பதால் அதிகமாக loan வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

39—

ஓய்வு அறை

*12092—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, திருமலைக்கோயில் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய ஓய்வு அறை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜனவரி 12]

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், தமிழகத்தில் தலைசிறந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், பண்பொழி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் என்கிற திருமலை குமாரசாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு ரூ.60,00,000/– மதிப்பீட்டில் திருக்கோயில் நிதிமூலம் அனைத்து வசதிகளுடன்கூடிய ஓய்வு அறைகள் கட்டும் பணி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசிபெற்ற அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு, அங்கீகரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

முற்பகல் 11–25

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கடையநல்லூர் தொகுதி, சிவராமபேட்டை அருகில் அருள்மிகு சிவன் கோயில் உள்ளது. அதேபோன்று கிருஷ்ணாபுரத்திலும் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில் இருக்கின்றது. இந்தத் திருக்கோயில்களுக்கு அதிகளவில் பக்தர்கள் வருகின்றனர். எனவே, இந்தக் கோயில்களுக்கு அடிப்படை வசதிகளை இந்த அரசு செய்து தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திருக்கோயில்கள் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. அந்தத் திருக்கோயில்களை துறை ரீதியாக ஆய்வுசெய்து, நிதியாதாரங்களைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று பக்தர்களின் வசதிக்காக ஓய்வு அறை கட்டுவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. கடையநல்லூர் தொகுதி, சொக்கம்பட்டி வைரவன் குளம், கருப்பாநதி கரையோரத்திலே பெரிய சுவாமி ஐயனார் கோயில் உள்ளது. இந்தக் கோயிலுக்கு மதுரை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களிலிருந்தும் மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்கள் அதிகமாக வருகை தருகின்றனர். குறிப்பாக, மாதந்தோறும் பௌர்ணமி, சிவராத்திரி, கடைசி வெள்ளிக்கிழமை, மகா சிவராத்திரி போன்ற நாட்களில் பக்தர்கள் அதிகளவில் வருகின்றனர். இந்தக் கோயிலை ஒட்டி பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று வெகு நாட்களாக அங்குள்ள மக்கள் கோரிக்கை வைத்திருக்கின்றனர். எனவே, இதனையும் நமது அரசாங்கம், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாகச் செய்து தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட துணைக் கேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாகும். பொதுமக்கள் பிரச்சினை என்கிற காரணத்தினால், அந்த இடத்தினைத் துறை ரீதியாக ஆய்வுசெய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று, பாலம் அமைக்க*

2018 ஜனவரி 12]

ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியம், மலைவையாவூரில் பிரசித்திப்பெற்ற பெருமாள் கோயில் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தேசிய நெடுஞ்சாலையில் மாமண்டூரிலிருந்து மதுராந்தகம் செல்லக்கூடிய வழியில் மேற்கு திசை நோக்கிப் பார்த்தால், மலையில் இருக்கக்கூடிய இந்தக் கோயில் அனைவருக்கும் தெரியும். தென் திருப்பதி என்று சொல்லக்கூடிய அளவிற்கு புகழ் பெற்ற ஒரு திருத்தலமாகும். அங்கு செல்வதற்கு மலை பாதை இருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட மிகப் பெரிய வெள்ளத்தினால் மலைப் பகுதியில் இருக்கக்கூடிய இக்கோயிலின் முன்பிருக்கும் முன் மண்டபமும், சுற்றுச்சுவரும் இடிந்து, ஒரு தொங்கு பாலம்போல் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. எந்த நேரத்தில் அந்தச் சுவர் இடிந்து விழுமோ தெரியாது. எனவே, பக்தர்களின் பாதுகாப்பினைக் கருதி, உடனடியாக அதனை நிவர்த்தி செய்து தரும்படி தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தக் கோயில் நூறாண்டுக்காலம் பழமை வாய்ந்த கோயிலாகும். அந்தக் கோயிலை ஆய்வு செய்து, தொல்பொருள் துறையின் வல்லுநர் குழு பரிந்துரையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறி அந்தப் பணியை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*